

# குறள் தேனீ

## கையேடு

https://fetnaconvention.org

kuralheni2019@fetna.org

# குறள் தேனீ போட்டி விதிமுறைகள் மற்றும் விவரங்கள்

## நிலைகள் மற்றும் வயது வரம்பு [Levels and Age limits]

| நிலைகள் | வயது வரம்பு[1] | குறள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அரும்புகள் | 8 வயது வரை | 35 குறள்கள்[2] |
| மலர்கள் | 12 வயது வரை | 70 குறள்கள்[2] |
| கனிகள் | 17 வயது வரை | 100 குறள்கள்[2] |

1 Age as of June 30, 2019

2 குறள்கள், குறளின் பொருள், குறளில் உள்ள சொற்கள், குறள் சொற்களின் பல பொருள்கள் இவை அனைத்தும் பதிவு செய்த போட்டியாளர்களுக்கு பதிவுத் தேதி முடிந்தவுடன் வழங்கப்படும்.

## அரும்புகள் நிலை

| சுற்று | கேள்வி வடிவம் | விளக்கம் மற்றும் உதாரணம் |
|---|---|---|
| 1 | கொடுக்கப்படும் முதல் சொல்லிற்குரிய திருக்குறளைத் தவறின்றி கூறவும். | நேரம் – 30 வினாடிகள்<br>மதிப்பெண்கள் – 10<br>உதாரணம்<br>கேள்வி : "அகர" எனத் தொடங்கும் குறளைக் கூறவும்<br>பதில் : அகர முதல எழுத்தெல்லாம் ஆதி<br>பகவன் முதற்றே உலகு |
| 2 | கொடுக்கப்படும் இறுதிச் சொல்லிற்குரிய திருக்குறளைத் தவறின்றி கூறவும் | நேரம் – 30 வினாடிகள்<br>மதிப்பெண்கள் – 10<br>உதாரணம் |

| | | |
|---|---|---|
| | | கேள்வி : "உலகு" என முடியும் குறளைக் கூறவும்<br><br>பதில் : அகர முதல எழுத்தெல்லாம் ஆதி<br><br>பகவன் முதற்றே உலகு |
| 3 | கொடுக்கப்படும் பொருளுக்குரிய திருக்குறளைக் கூறி அதற்கு ஆங்கிலப்பொருள் கூறவும். | நேரம் – 30 வினாடிகள்<br><br>மதிப்பெண்கள் – 10<br><br>உதாரணம்<br><br>கேள்வி : எழுத்துக்கள் எல்லாம் அகரத்தில் தொடங்குகின்றன; (அது போல) உலகம் தாய் தந்தையரில் தொடங்குகிறது.<br><br>பதில் : அகர முதல எழுத்தெல்லாம் ஆதி<br><br>பகவன் முதற்றே உலகு.<br><br>English Meaning – Like Alphabets begin with 'A', the world begins with the parents. |
| 4 | சவால் சுற்று (Tie Breaker) | திருக்குறளை பற்றிய பொது அறிவுக்கேள்விகள். |

பல அணிகள் சம மதிப்பெண்கள் பெற்றால், அதை தவிர்க்க (Tie–breaker) "சவால் சுற்று" கேள்விகள் கேட்கப்படும்

**பாடத்திட்டம் [Syllabus]**

- அரும்புகள் நிலைக்கான திருக்குறள்கள்(35) கையேட்டின் இறுதி பகுதியில் உள்ளது
- சவால் சுற்றுக்கான கேள்வி பதில்களை பங்கேற்பாளர்களே தயாரித்து படிக்க வேண்டும்

# மலர்கள் நிலை

| சுற்று | கேள்வி வடிவம் | விளக்கம் மற்றும் உதாரணம் |
|---|---|---|
| 1 | கொடுக்கப்படும் இறுதிச் சொல்லிற்குரிய திருக்குறளைத் தவறின்றி கூறி அதற்கான பொருளையும் கூறவும் | நேரம் – 30 வினாடிகள்<br>மதிப்பெண்கள் – 10<br>உதாரணம்<br>கேள்வி : "உலகு" என முடியும் குறளைக் கூறவும்<br>பதில் : அகர முதல எழுத்தெல்லாம் ஆதி<br>பகவன் முதற்றே உலகு |
| 2 | திருக்குறளிலிருந்து ஒரு சொல் கொடுக்கப்படும், அதற்குரிய 5 பொருள்களைக் கூறி பின் அந்த சொல்லுக்கான திருக்குறளை முழுமையாக கூறுதல் வேண்டும். | நேரம் – 30 வினாடிகள்<br>மதிப்பெண்கள் – 10 (5x1 + 5)<br>உதாரணம்<br>கேள்வி : ஆதி என்னும் சொல்லுக்கு பல பொருள் கூறுக? பின் அதன் திருக்குறளை முழுமையாக கூறுக?<br>பதில் : ஆதி : தொடக்கம் ; பழைமை ; கடவுள் ; ; சூரியன் ; சுக்கிரன் ; நாரை ; ஆடாதோடை .<br><br>அகர முதல எழுத்தெல்லாம் ஆதி<br>பகவன் முதற்றே உலகு. |
| 3 | கொடுக்கப்படும் சொல்லுக்கு திருக்குறளைக் கூறி அக்குறளுக்கு பொருள் கூறுதல் வேண்டும். | நேரம் – 30 வினாடிகள்<br>மதிப்பெண்கள் – 10<br>உதாரணம்<br>கேள்வி: "உலகம்" என்ற சொல்லுள்ள குறளினைக் கூறி அக்குறளுக்கு பொருள் கூறுக ? |

| | | |
|---|---|---|
| | | பதில்: வான்நின்று உலகம் வழங்கி வருதலால்<br>தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று<br><br>பொருள்: உரிய காலத்தில் இடைவிடாது மழை பெய்வதால்தான் உலகம் நிலைபெற்று வருகிறது: அதனால் மழையே அமிழ்தம் எனலாம் |
| 4 | சவால் சுற்று (Tie Breaker) | திருக்குறளை பற்றிய பொது அறிவுக்கேள்விகள். |

பல அணிகள் சம மதிப்பெண்கள் பெற்றால், அதை தவிர்க்க (Tie-breaker) "சவால் சுற்று" கேள்விகள் கேட்கப்படும்

## பாடத்திட்டம் [Syllabus]

- மலர்கள் நிலைக்கான திருக்குறள்கள்(70) கையேட்டின் இறுதி பகுதியில் உள்ளது
- சவால் சுற்றுக்கான கேள்வி பதில்களை பங்கேற்பாளர்களே தயாரித்து படிக்க வேண்டும்.

## கனிகள் நிலை

| சுற்று | கேள்வி வடிவம் | விளக்கம் மற்றும் உதாரணம் |
|---|---|---|
| 1 | கொடுக்கப்படும் இறுதிச் சொல்லிற்குரிய திருக்குறளைத் தவறின்றி கூறி, அதற்கான பொருளைக் கூறவும் | நேரம் – 30 வினாடிகள்<br>மதிப்பெண்கள் – 10<br>உதாரணம்<br>கேள்வி : "உலகு" என் முடியும் குறளைக் கூறவும்<br>பதில் : அகர முதல எழுத்தெல்லாம் ஆதி<br>பகவன் முதற்றே உலகு |

| | | |
|---|---|---|
| | | பொருள்: எழுத்துக்கள் எல்லாம் அகரத்தில் தொடங்குகின்றன; (அது போல) உலகம் தாய் தந்தையரில் தொடங்குகிறது. |
| 2 | திருக்குறளிலிருந்து ஒரு சொல் கொடுக்கப்படும், அதற்குரிய 5 பொருள்களைக் கூறி பின் அந்த சொல்லுக்கான திருக்குறளை முழுமையாக கூறுதல் வேண்டும். ( மதிப்பெண் 10 ) | நேரம் – 30 வினாடிகள்<br><br>மதிப்பெண்கள் – 10 (5x1 + 5)<br><br>உதாரணம்<br><br>கேள்வி : ஆதி என்னும் சொல்லுக்கு பல பொருள் கூறுக? பின் அதன் திருக்குறளை முழுமையாக கூறுக?<br><br>பதில் : ஆதி : தொடக்கம் ; பழைமை ; கடவுள் ; ; சூரியன் ; சுக்கிரன் ; நாரை ; ஆடாதோடை .<br><br><br>அகர முதல எழுத்தெல்லாம் ஆதி<br><br>பகவன் முதற்றே உலகு |
| 3 | கொடுக்கப்படும் அதிகாரத்திலிருந்து ஒரு திருக்குறள் கூறி அதற்கு பொருள் கூறுக. | நேரம் – 30 வினாடிகள்<br><br>மதிப்பெண்கள் – 10<br><br>உதாரணம்<br><br>கேள்வி: வாய்மை என்னும் அதிகாரத்திலிருந்து ஒரு திருக்குறள் கூறி அதற்கு பொருள் கூறுக?<br><br>பதில் :<br><br>உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்<br>உள்ளத்து ளெல்லாம் உளன் |

| | | |
|---|---|---|
| | | பொருள்: மனத்தால்கூடப் பொய்யை நினைக்காமல் வாழ்பவர்கள், மக்கள் மனத்தில் நிலையான இடத்தைப் பெறுவார்கள்) |
| 4 | சவால் சுற்று (Tie Breaker) | திருக்குறளை பற்றிய பொது அறிவுக்கேள்விகள். |

பல அணிகள் சம மதிப்பெண்கள் பெற்றால், அதை தவிர்க்க (Tie-breaker) "சவால் சுற்று" கேள்விகள் கேட்கப்படும்

## பாடத்திட்டம் [Syllabus]

- கனிகள் நிலைக்கான திருக்குறள்கள்(100) கையேட்டின் இறுதி பகுதியில் உள்ளது
- சவால் சுற்றுக்கான கேள்வி பதில்களை பங்கேற்பாளர்களே தயாரித்து படிக்க வேண்டும்

# குறள்கள் – அரும்புகள் நிலை

| # | குறள் எண் | அதிகாரம் | குறள் | பொருள் [தமிழ்] | பொருள் [ஆங்கிலம்] |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | கடவுள் வாழ்த்து | அகர முதல எழுத்தெல்லாம் ஆதி<br>பகவன் முதற்றே உலகு. | எழுத்துக்கள் எல்லாம் அகரத்தில் தொடங்குகின்றன; (அது போல) உலகம் கடவுளில் தொடங்குகிறது. | As the letter A is the first of all letters, so the eternal God is first in the world |
| 2 | 12 | வான் சிறப்பு | துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்<br>துப்பாய தூஉம் மழை | உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவோர்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும் | Rain produces good food, and is itself food |
| 3 | 26 | நீத்தார் பெருமை | செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்<br>செயற்கரிய செய்கலா தார் | செய்ய கடினமான நல்ல செயல்களை செய்பவர்கள் பெரியோர்! அப்படிப்பட்ட செயல்களை செய்யாதோர் சிறியோர்! | The great people accomplish difficult things but the average people cannot. |
| 4 | 34 | அறன்வலியுறுத்தல் | மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்<br>ஆகுல நீர பிற | மனம் தூய்மையாக இருப்பதே அறம்; மற்றவை எல்லாம் வெறும் ஆடம்பரமே! | Having pure thoughts is known as morality; everything else is just a show off. |
| 5 | 45 | இல் வாழ்க்கை | அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை<br>பண்பும் பயனும் அது | அன்பான உள்ளமும் அதையொட்டிய நல்ல செயல்களும் இருந்தால் இல்வாழ்க்கை பண்பும், பயனும் பயனும் கொண்டு விளங்கும் | Love and morality are the essence and purpose of family life. |
| 6 | 50 | இல் வாழ்க்கை | வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்<br>தெய்வத்துள் வைக்கப் படும் | உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன், வானுலகத்தில் உள்ள தெய்வம் போல் மதிக்கப்படுவான் | Those who live their life the right way will be regarded as God. |
| 7 | 69 | மக்கட்பேறு | ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்<br>சான்றோன் எனக்கேட்ட தாய் | நல்ல மகனைப் பெற்றெடுத்தவள் என்று ஊரார் பாராட்டும் பொழுது அவனைப் பெற்றபொழுது அடைந்த | When a mother hears that her child is a great scholar will be happier |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மகிழ்ச்சியைவிட அதிக மகிழ்ச்சியை அந்தத் தாய் அடைவாள். | than when she gave birth to him. |
| 8 | 70 | மக்கட்பேறு | மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்எனும் சொல் | பிள்ளைகள் தம் பெற்றோர்க்கு செய்யும் கைம்மாறு, இந்த பிள்ளையை பெற இவர்கள் என்ன தவம் செய்தார்களோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும் | The favor a son can do to his father is to make others say that his father is very fortunate to have him as son. |
| 9 | 72 | அன்புடைமை | அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு | அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே வேண்டும் என்று வாழ்வர். அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென வாழ்வர். | People with no love keep everything to themselves, whereas those with love will give even their bones to others. |
| 10 | 90 | விருந்தோம்பல் | மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து. | அனிச்சப்பூ முகர்த்தவுடன் வாடி விடும். அதுபோல், முகம் மகிழ்ச்சி இல்லாமல் வரவேற்றால் விருந்தினர் வாடி விடுவார் | Anicham flower wilts when just smelled, so do the guests when received by unwelcoming host. |
| 11 | 100 | இனியவைகூறல் | இனிய உளவாக இன்னாத கூறல் கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. | இனிமையான சொற்கள் இருக்கும்போது அவற்றை விட்டு கடுமையாகப் பேசுவது நல்ல பழங்கள் இருக்கும் போது அவற்றை விட்டு காய்களைத் உண்பது போலாகும் | Saying bad things when there are good things to say is like eating unripe fruit when ripe one is available. |
| 12 | 108 | செய்நன்றி அறிதல் | நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று | ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதல்ல. ஆனால், ஒருவர் தீமை செய்திருந்தால் அதை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது | Do not forget good deeds; but forget the bad deeds right away. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | 127 | அடக்கமுடைமை | யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு | ஒருவர் எதைக் காத்திட முடியாவிட்டாலும் நாவை அடக்கிக, நற்சொல்லே சொல்ல வேண்டும் . இல்லைஎன்றால் அவர் சொன்ன சொல்லே அவர் துன்பத்துக்குக் காரணமாகி விடும் | We should always protect our tongue from saying bad things. Otherwise, it will come back to haunt them. |
| 14 | 129 | அடக்கமுடைமை | தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு | நெருப்பினால் சுட்ட புண்கூட ஆறி விடும்; ஆனால் வெறுப்புக் கொண்டு சொல்லும் சொற்கள் நீங்காத துன்பம் தரும். | A burn by fire may heal easily whereas hurtful words will leave a scar forever. |
| 15 | 131 | ஒழுக்கமுடைமை | ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும் | ஒருவருக்கு ஒழுக்கம் சிறப்பைத் தரும். அதனால் அதை உயிரைக் காட்டிலும் மேலானதாக காக்க வேண்டும். | Discipline gives you greatness because of that it is regarded better than life. |
| 16 | 226 | ஈகை | அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி | ஏதும் இல்லாதவரின் கடும்பசியைத் தீர்த்து வைப்பதே பொருளைப் பெற்றவர் சேமித்து வைக்கும் இடமாகும். | Helping the hunger of needy is the only purpose of one's wealth. |
| 17 | 292 | வாய்மை | பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின் | குற்றம் அற்ற நன்மையைத் தரும் என்றால் சில நேரங்களில் பொய் சொல்வதில் தவறில்லை | It is acceptable to say a lie if it is for a good cause with no harm. |
| 18 | 314 | இன்னாசெய்யாமை | இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயஞ் செய்து விடல் | நமக்குத் தீமை செய்தவருக்கு கொடுக்கும் தண்டனை , அவர் வெட்கித் தலைகுனியும்படியாக அவருக்கு நன்மை செய்வதுதான். | The punishment to those who have done evil, is to put them to shame by showing them kindness. |
| 19 | 319 | இன்னாசெய்யாமை | பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா பிற்பகல் தாமே வரும் | அடுத்தவர்க்குத் தீமை செய்தால், நமக்குத் தீமை நம்மைத் தேடி தானாக வரும். | If you inflict harm to others in the morning, it |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | will come back to you by the evening. |
| 20 | 391 | கல்வி | கற்க கசடறக் கற்பவை கற்றபின்<br>நிற்க அதற்குத் தக | கற்கும் போது தவறில்லாமல் கற்றுக்கொள்ள வேண்டும். பிறகு, அதை பின் பற்றி நடக்கவேண்டும் | Learn without mistakes and live by it. |
| 21 | 400 | கல்வி | கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு<br>மாடல்ல மற்றை யவை | கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கிணையான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை. | The biggest asset to one is their education, but nothing else. |
| 22 | 416 | கேள்வி | எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்<br>ஆன்ற பெருமை தரும் | நல்லவற்றை எந்த அளவுக்கு கேட்டு அறிகிறோமோ , அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும். | Choosing to hear good things will yield great honor. |
| 23 | 423 | அறிவுடைமை | எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்<br>மெய்ப்பொருள் காண்ப தறிவு | எந்தக் கருத்தை யார் சொல்லக் கேட்டாலும் , அதனை ஆராய்ந்து, உண்மையை அறிந்து செயல்பட வேண்டும் | Whatever we hear from others, ensure it is true before accepting. |
| 24 | 435 | குற்றங்கடிதல் | வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்<br>வைத்தூறு போலக் கெடும் | தமக்கு ஒரு தீமை வருவதற்கு முன்பே காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை, நெருப்பின் முன் வைத்த வைக்கோல் போல் அழிந்துவிடும். | One should aware and protect from possible troubles, otherwise their life will be like hay in the fire. |
| 25 | 448 | பெரியாரைத் துணைக்கோடல் | இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்<br>கெடுப்பா ரிலானுங் கெடும் | அறிவுரை கூறும் பெரியோரின் துணை இல்லாதவர்கள் , தன்னைக் கெடுக்கும் பகைவர் எவரும் இல்லாவிட்டாலும் தானே கெடுவர். | Without good advisor even a great king could fail in spite no enemies. |
| 26 | 467 | தெரிந்துசெயல்வகை | எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்<br>எண்ணுவம் என்பது இழுக்கு | நன்றாகச் சிந்தித்த பிறகே செயலில் இறங்க வேண்டும்: இறங்கிய பிறகு சிந்திக்கலாம் என்பது தவறு. | Assess and understand a task before starting it. But |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | once taken, you must complete it. |
| 27 | 471 | வலியறிதல் | வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல் | செயலின் வலிமையும் தன் வலிமையும் பகைவனுடைய வலிமையும், இருவருக்கும் துணையானவரின் வலிமையும் ஆராய்ந்து செயல்பட வேண்டும். | Assess the task, your strength, hurdle and the available help before starting it. |
| 28 | 504 | தெரிந்துதெளிதல் | குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல் | ஒருவரின் நல்ல குணங்களையும், அவரது குறைகளையும் ஆராய்ந்து பார்த்து அவற்றில் மிகுதியாக இருப்பவை எவை என்பதைத் தெரிந்து அதன் பிறகு அவரைப் பற்றிய ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டும் | Weigh the positives and negatives of a person before judging him/her. |
| 29 | 517 | தெரிந்துவினையாடல் | இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் | ஒரு காரியத்தை ஒருவர் எப்படி செய்து முடிப்பார் என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு அந்தக் காரியத்தை அவரிடம் ஒப்படைக்க வேண்டும் | Assign the work to a person only after having considered his ability and means to complete it. |
| 30 | 595 | ஊக்கமுடைமை | வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு | நீர்ப்பூக்களின் அடிக்காம்பின் நீளம் நீரின் அளவே இருக்கும். அது போல மக்களின் உயர்வும் அவர்களின் மன ஊக்கத்தின் அளவே இருக்கும். | The length of the stem of water–Lilly depends on the depth of water; so is one's greatness depends on their heart. |
| 31 | 664 | வினைத்திட்பம் | சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல் | சொல்லுவது எல்லோருக்கும் எளிது; சொல்லியதை சொல்லியது போல் செய்து முடிப்பதுதான் கடினம். | It's easier said than done. |
| 32 | 706 | குறிப்பறிதல் | அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம் | தன் அருகே இருக்கும் பொருளைக் காட்டும் கண்ணாடி போல் ஒருவனது | The face reflects the inner thoughts of a person like the mirror |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மனத்தில் உள்ளதை அவன் முகம் காட்டிவிடும். | reflects the object in front of it. |
| 33 | 788 | நட்பு | உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு | ஆடை நழுவும்போது உடனே சென்று உதவும் கை போல, நண்பனுக்குத் துன்பம் வந்த போது உடனே சென்று உதவுவது நட்பு | Swift as one's hand reaching to the slipping clothes, true friends come for immediate help. |
| 34 | 948 | மருந்து | நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல் | நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும். | Diagnose and discover the cause before treating the patients. |
| 35 | 1033 | உழவு | உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர் | உழவு செய்து வாழ்பவர்களே உரிமையோடு வாழ்பவர்கள். மற்றவர்கள் எல்லோரும் அவர்களைத் சார்ந்து வாழ்பவர்கள். | Farming is the noblest profession in the world. Everything else must follow it. |

# குறள்கள் – மலர்கள் நிலை

| # | குறள் எண் | அதிகாரம் | குறள் | பொருள் | ஒரு சொல் பல பொருள் |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | கடவுள் வாழ்த்து | அகர முதல எழுத்தெல்லாம் ஆதி<br>பகவன் முதற்றே உலகு. | எழுத்துக்கள் எல்லாம் அகரத்தில் தொடங்குகின்றன; (அது போல) உலகம் கடவுளில் தொடங்குகிறது. | ஆதி : தொடக்கம் ; பழைமை ; கடவுள் ; ; சூரியன் ; சுக்கிரன் ; நாரை ; ஆடாதோடை . |
| 2 | 2 | கடவுள் வாழ்த்து | கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்<br>நற்றாள் தொழாஅர் எனின் | தூய அறிவு வடிவானவனின் திருவடிகளை வணங்காதவர், படித்ததனால் பெற்ற பயன்தான் என்ன?. | பயன் : பலன் ; செல்வம் ; பழம் ; அகலம் ; சாறு ; பால் ; அமுதம் ; நீர் . |
| 3 | 11 | வான் சிறப்பு | வான்நின்று உலகம் வழங்கி வருதலால்<br>தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று | உரிய காலத்தில் இடைவிடாது மழை பெய்வதால்தான் உலகம் நிலைபெற்று வருகிறது; அதனால் மழையே அமிழ்தம் எனலாம் | அமிர்தம் : உணவு ; ஆவின்பால்; நெய் ; மோர் ; நீர் ; மழை ; தேவருணவு ; பாதரசம் . |
| 4 | 12 | வான் சிறப்பு | துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்<br>துப்பாய தூஉம் மழை | உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் | துப்பாக்கி : துமுக்கி ; சுடுங்கருவி ; |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தருவதோடு, பருகுவோர்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும் | கதிர்த்தலையைத் தாக்கும் நெற்பயிர்நோய் . |
| 5 | 15 | வான் சிறப்பு | கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை | பெய்யாமல் மக்களைக் வருந்துவதும், வருந்துவோர்க்கு துணையாய் நின்று, பெய்து காப்பாற்றுவதும் மழையே யாகும் | |
| 6 | 16 | வான் சிறப்பு | விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே பசும்புல் தலைகாண்பு அரிது | வானத்திலிருந்து மழைத்துளி விழாது போனால், பசும்புல்லின் நுனியைக்கூட இங்கே காண முடியாது. | தலை : சிரம் ; முதல் ; சிறந்தது ; வானம் ; இடம் ; உயர்ந்தோன் ; தலைவன் ; உச்சி ; நுனி . |
| 7 | 20 | வான் சிறப்பு | நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும் வான்இன்று அமையாது ஒழுக்கு | எவரும் நீர் இல்லாமல் வாழமுடியாது; அந்த நீரோ மழை இல்லாமல் கிடைக்காது | நீர் :தண்ணீர் ; கடல் ; இரசம் ; பனிநீர் ; உடல் இரத்தம் ; ஈரம் ; மணியின் ஒளி ; குணம் . |
| 8 | 26 | நீத்தார் பெருமை | செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலா தார் | செய்ய கடினமான நல்ல செயல்களை செய்பவர்கள் பெரியோர்! அப்படிப்பட்ட செயல்களை செய்யாதோர் சிறியோர்! | |
| 9 | 28 | நீத்தார் பெருமை | நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும் | சான்றோர்களின் அறவழி நூல்களே , அவர்களின் | மொழி : சொல் ; கட்டுரை ; சொற்றொகுதி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பெருமையை இந்த உலகில் அழியாமல் எடுத்துக் காட்டும் | (சொல்தொகுதி) ; பேச்சுமுறை ; வாக்குமூலம்; பொருள்; மரக்கணு. |
| 10 | 29 | நீத்தார் பெருமை | குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயும் காத்தல் அரிது. | பெரியவர்கள் கோபம் கொண்டால் அந்தக் கோபம் அவர்கள் உள்ளத்தில் ஒரு நொடி கூட நிலைத்து நிற்காது | குணம் : பொருளின் தன்மை ; ஒழுக்கம்; மேன்மை ; புத்தித் தெளிவு ; நிறம் ; வில்லின் நாண்; குடம் ; கயிறு . |
| 11 | 31 | அறன்வலியுறுத்தல் | சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு | சிறப்பையும், செழிப்பையும் தரக்கூடிய அறவழி ஒன்றைத்தவிர நல்ல வழி வேறு எதுவும் இல்லை | .சிறப்பு : பெருமை ; திருவிழா ; செல்வம் ; அன்பளிப்பு ; மதிப்பு ; தலைமை ; பகட்டு ; வரிசை ; மிகுதி ; |
| 12 | 32 | அறன்வலியுறுத்தல் | அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை மறத்தலின் ஊங்கில்லை கேடு | அறம் செய்வதை விட நன்மையும் இல்லை. அதைச் செய்ய மறப்பதைவிட தீமையும் இல்லை | கேடு : அழிவு ; இழப்பு ; வறுமை ; தீமை ; கெடுதல் ; வேறுபாடு ; அழகின்மை . |
| 13 | 34 | அறன்வலியுறுத்தல் | மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற | மனம் தூய்மையாக இருப்பதே அறம்; மற்றவை எல்லாம் வெறும் ஆடம்பரமே! | மாசு : அழுக்கு ; குற்றம் ; மறு ; மாறுபாடு ; கருமை ; இருள் ; மேகம் ; பாவம் ; தீமை ; தூளி; பால்வீதிமண்டலம்; கோழை. |
| 14 | 35 | அறன்வலியுறுத்தல் | அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்<br>இழுக்கா இயன்றது அறம் | பொறாமை, பேராசை, கோபம், புண்படுத்தும் சொல் இந்த நான்கும் இல்லாமல் வாழ்வதே அறமாகும் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | 45 | இல் வாழ்க்கை | அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது | அன்பான உள்ளமும் அதையொட்டிய நல்ல செயல்களும் இருந்தால் இல்வாழ்க்கை பண்பும், பயனும் பயனும் கொண்டு விளங்கும் | பண்பு :வண்ணம் , வடிவு , அளவு , சுவை என்னும் நாற்குணம் ; இயல்பு ; மனத்தன்மை ; நற்குணம் ; விதம்; வகை; முறை; அழகு. |
| 16 | 49 | இல் வாழ்க்கை | அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும் பிறன்பழிப்ப தில்லாயின் நன்று | இல்வாழ்க்கையே சிறந்த அறம் ஆகும். அதுவும் பிறர் பழிக்கு ஆளாகாமல் இருப்பது நல்லது | நன்று : நல்லது ; சிறப்பு ; பெரிது ; அறம் ; இன்பம் ; உதவி ; வாழ்வின் நோக்கம் . |
| 17 | 50 | இல் வாழ்க்கை | வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும் தெய்வத்துள் வைக்கப் படும் | உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன், வானுலகத்தில் உள்ள தெய்வம் போல் மதிக்கப்படுவான் | வையம் : பூமி ; உலகம்; குதிரை இழுக்கும் வண்டி ; தேர் ; ஊர்தி ; கூடாரவண்டி ; எருது ; விளக்கு ; யாழ் . |
| 18 | 64 | மக்கட்பேறு | அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள் சிறுகை அளாவிய கூழ் | தம்முடைய மக்களின் சிறு கைகளால் அளாவப்பெற்ற உணவு, பெற்றோர்க்கு அமிழ்தத்தை விட மிக்க இனிமை உடையதாகும். | |
| 19 | 67 | மக்கட்பேறு | தந்தை மகற்காற்று நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல் | பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு செய்யும் நல்லுதவி, அவர்களை கற்றவர் அவையில் முதன்மை பெற செய்வது. | மகன்: புதல்வன் ; ஆண்பிள்ளை ; குழந்தை ; சிறந்தோன் ; வீரன் ; கணவன் . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20 | 69 | மக்கட்பேறு | ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய் | நல்ல மகனைப் பெற்றெடுத்தவள் என்று ஊரார் பாராட்டும் பொழுது அவனைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியைவிட அதிக மகிழ்ச்சியை அந்தத் தாய் அடைவாள். | தாய் : அன்னை ; அரசி; குருவின் மனைவி; அண்ணன் மனைவி; மகன்/மகள் கொடுத்தவள் (மாமியார்) . |
| 21 | 70 | மக்கட்பேறு | மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்எனும் சொல் | பிள்ளைகள் தம் பெற்றோர்க்கு செய்யும் கைம்மாறு, இந்த பிள்ளையை பெற இவர்கள் என்ன தவம் செய்தார்களோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும் | |
| 22 | 71 | அன்புடைமை | அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும் | உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாழ்ப்பாள் போட்டு அடைத்து வைக்க முடியாது. அன்புடையவரின் சிறு கண்ணீரே உள்ளே இருக்கும் அன்பைப் பலரும் அறிய வெளிப்படுத்திவிடும் | தாழ் : தாழ்ப்பாள் ; சீப்பு ; தாழக்கோல்; திறவுகோல் ; நீளம் ; வணங்கு; அடிபணிதல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23 | 72 | அன்புடைமை | அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்<br>என்பும் உரியர் பிறர்க்கு | அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே வேண்டும் என்று வாழ்வர். அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென வாழ்வர். | அன்பு: பற்று ; நேயம் ; அருள் ; பக்தி, பாசம். |
| 24 | 90 | விருந்தோம்பல் | மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து<br>நோக்கக் குழையும் விருந்து. | அனிச்சப்பூ முகர்த்தவுடன் வாடி விடும். அதுபோல், முகம் மகிழ்ச்சி இல்லாமல் வரவேற்றால் விருந்தினர் வாடி விடுவார் | முகம் : நுனி ; தொடக்கம் ; வடிவு ; ; தியானம் ; முகத்துதி ; காரணம் ; முதன்மை . |
| 25 | 100 | [இனியவைகூறல்]() | இனிய உளவாக இன்னாத கூறல்<br>கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. | இனிமையான சொற்கள் இருக்கும்போது அவற்றை விட்டு கடுமையாகப் பேசுவது நல்ல பழங்கள் இருக்கும் போது அவற்றை விட்டு காய்களைத் உண்பது போலாகும் | கனி : பழம் ; கனிவு ; சாரம் ; இனிமை ; சுரங்கம் . |
| 26 | 102 | செய்நன்றி அறிதல் | காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்<br>ஞாலத்தின் மாணப் பெரிது | தேவைப்படும் காலத்தில் செய்த உதவி சிறியதாக இருந்தாலும், அது உலகத்தைவிடப் பெரியதாக மதிக்கப்படும் | காலம் : பொழுது ; சமயம் ; நேரம்; பருவம் ; பருவப் பயிர் ; முக்காலம் ; இசைக்குரிய மூன்று காலம் ; தாளப்பிரமாணம் . |
| 27 | 108 | செய்நன்றி அறிதல் | நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது<br>அன்றே மறப்பது நன்று | ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நல்லதல்ல. ஆனால், ஒருவர் தீமை செய்திருந்தால் அதை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது | |
| 28 | 121 | அடக்கமுடைமை | அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும் | அடக்கம் அழியாத புகழைக் கொடுக்கும். அடங்காமை ஒருவரின் வாழ்வையே கெடுத்து விடும் | அடக்கம்: கீழ்ப்படிவு ; பணிவு ; அடங்கிய பொருள் ; மறை பொருள் ; கொள்முதல் |
| 29 | 127 | அடக்கமுடைமை | யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு | ஒருவர் எதைக் காத்திட முடியாவிட்டாலும் நாவை அடக்கிக, நற்சொல்லே சொல்ல வேண்டும் . இல்லைஎன்றால் அவர் சொன்ன சொல்லே அவர் துன்பத்துக்குக் காரணமாகி விடும் | நாக்கு: சொல்; தீயின் சுடர்; பூட்டின் தாள்; தானியக்கதிர்; துடுப்பு |
| 30 | 129 | அடக்கமுடைமை | தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு | நெருப்பினால் சுட்ட புண்கூட ஆறி விடும்; ஆனால் வெறுப்புக் கொண்டு சொல்லும் சொற்கள் நீங்காத துன்பம் தரும். | |
| 31 | 131 | ஒழுக்கமுடைமை | ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும் | ஒருவருக்கு ஒழுக்கம் சிறப்பைத் தரும். அதனால் அதை உயிரைக் | உயிர் : காற்று ; மூச்சு; ஆன்மா; ஓரறிவுயிர் முதலிய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | காட்டிலும் மேலானதாக காக்க வேண்டும். | உயிரினம் ; உயிரெழுத்து ; ஓசை. |
| 32 | 151 | பொறையுடைமை | அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை | தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம் போல், தம்மை இகழ்வாரையும் பொறுப்பதே நல்ல பண்பாகும் | நிலம் : தரை ; மண் ; பூமி ; இடம் ; வயல் ; பதவி ; தானம் ; விடயம்; கள்ளிவகை . |
| 33 | 190 | புறங்கூறாமை | ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின் தீதுண்டோ மன்னும் உயிர்க்கு | பிறர் குற்றத்தைக் காண்பவர்கள் தமது குற்றத்தையும் எண்ணிப் பார்த்தல்,புறங்கூறும் பழக்கமும் போகும்; வாழ்க்கையும் நிம்மதியாக அமையும். | குற்றம்: பிழை ; பழி ; தவறு ; தப்பு; துன்பம் ; உடற்குறை ; தீங்கு ; அபராதம். |
| 34 | 200 | பயனில சொல்லாமை | சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க சொல்லிற் பயனிலாச் சொல் | சொற்களில் பயன் உடைய சொற்களை மட்டுமே சொல்லவேண்டும், பயன் இல்லாத சொற்களைச் சொல்லவே கூடாது | சொல் : மொழி ; பேச்சு ; பழமொழி ; உறுதிமொழி ; புகழ் ; மந்திரம் ; ; கட்டளை ; புத்திமதி ; சத்தம் ; நாமகள் ; ; நெல்; வார்த்தை. |
| 35 | 202 | தீவினையச்சம் | தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும் | தீய செயல்களால் தீமையே விளையும் என்பதால் அச்செயல்களைத் தீயை விடக் கொடுமையானதாகக் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கருதி அவற்றைச் செய்யக்கூடாது | |
| 36 | 212 | ஒப்புரவறிதல் | தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு | ஒருவன் முயன்று சம்பாதித்த பொருள் தகுதியுடையவருக்கு உதவி செய்யவே பயன் பட வேண்டும் | தக்கார்: தகுதியுடையோர் ;மேன்மக்கள் ; நடுவுநிலைமையுடையோர் ; பெருமையிற் சிறந்தோர் ; உறவினர் . |
| 37 | 226 | ஈகை | அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி | ஏதும் இல்லாதவரின் கடும்பசியைத் தீர்த்து வைப்பதே பொருளைப் பெற்றவர் சேமித்து வைக்கும் இடமாகும். | பொருள்: செல்வம்; செய்தி ; உண்மைக்கருத்து ; தத்துவம் ; அறிவு ; கொள்கை ; அறம் ; பயன்; கடவுள் ; பலபண்டம் ; பொன் ; மகன் ; தந்திரம் . |
| 38 | 231 | புகழ் | ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு | ஏழைகளுக்கு கொடுப்பது, அதனால் புகழ் பெற்று வாழ்வது இதுவே ஒருவருக்கு பயன் தரக்கூடியது. | ஊதியம் : சம்பளம்; கல்வி ; பயன்; வெகுமதி; வெகுமானம்; சன்மானம் |
| 39 | 236 | புகழ் | தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று. | எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதில் புகழுடன் விளங்கவேண்டும்; இல்லையேல் அந்தத் துறையில் ஈ.டுபடாமல் இருப்பதே நல்லது | புகழ்: துதி ; கீர்த்தி ; பெருமை; அருஞ்செயல் ; அகத்தி ; வாகை . |
| 40 | 280 | கூடாவொழுக்கம் | மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்து விடின் | உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டு | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | விட்டால் மொட்டை அடித்தல், சடை வளர்த்தல் போன்ற புற வேடங்கள் தேவையில்லை | |
| 41 | 292 | வாய்மை | பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின் | குற்றம் அற்ற நன்மையைத் தரும் என்றால் சில நேரங்களில் பொய் சொல்வதில் தவறில்லை | புரை: குற்றம் ; குரல்வளை ; விளக்குமாடம் ; உள்ளோடும் புண் ; கண்ணோய்வகை ; பொய் ; களவு ; மடிப்பு ; வீடு ; ஆசிரமம். |
| 42 | 294 | வாய்மை | உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்து ளெல்லாம் உளன் | மனத்தால்கூடப் பொய்யை நினைக்காமல் வாழ்பவர்கள், மக்கள் மனத்தில் நிலையான இடத்தைப் பெறுவார்கள் | உள்ளம் : மனம் ; உள்ளக்கருத்து; எண்ணம் ; ஞானம் ; ஊக்கம் ; முயற்சி. |
| 43 | 314 | இன்னாசெய்யாமை | இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயஞ் செய்து விடல் | நமக்குத் தீமை செய்தவருக்கு கொடுக்கும் தண்டனை , அவர் வெட்கித் தலைகுனியும்படியாக அவருக்கு நன்மை செய்வதுதான். | நாணம்: வெட்கம்; அறிவு; பயபக்தி; மானம்; தணிகை; கூச்சம். |
| 44 | 319 | இன்னாசெய்யாமை | பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா பிற்பகல் தாமே வரும் | அடுத்தவர்க்குத் தீமை செய்தால், நமக்குத் தீமை நம்மைத் தேடி தானாக வரும். | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 45 | 391 | கல்வி | கற்க கசடறக் கற்பவை கற்றபின்<br>நிற்க அதற்குத் தக | கற்கும் போது தவறில்லாமல் கற்றுக்கொள்ள வேண்டும். பிறகு, அதை பின் பற்றி நடக்கவேண்டும் | கசடு: குற்றம்; அழுக்கு; மாசு ; தழும்பு ; வடு; குறைவு. |
| 46 | 396 | கல்வி | தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்<br>கற்றனைத் தூறும் அறிவு | தோண்டத் தோண்ட ஊற்று நீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும். | |
| 47 | 400 | கல்வி | கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு<br>மாடல்ல மற்றை யவை | கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கிணையான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை. | செல்வம்: கல்வி; அழகு; செழிப்பு; பொருள்; பணம்; மகளிரின் கொஞ்சற்பேச்சு . |
| 48 | 416 | கேள்வி | எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்<br>ஆன்ற பெருமை தரும் | நல்லவற்றை எந்த அளவுக்கு கேட்டு அறிகிறோமோ , அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும். | பெருமை: மாட்சிமை ; மிகுதி ; பருமை ; புகழ் ; வல்லமை ; அகந்தை ; அருமை . |
| 49 | 423 | அறிவுடைமை | எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்<br>மெய்ப்பொருள் காண்ப தறிவு | எந்தக் கருத்தை யார் சொல்லக் கேட்டாலும் , அதனை ஆராய்ந்து, உண்மையை அறிந்து செயல்பட வேண்டும் | மெய்: உண்மை ; உடல் ; உயிர் ; உணர்ச்சி ; மார்பு ; ஒற்றெழுத்து . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 50 | 435 | குற்றங்கடிதல் | வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும் | தமக்கு ஒரு தீமை வருவதற்கு முன்பே காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை, நெருப்பின் முன் வைத்த வைக்கோல் போல் அழிந்துவிடும். | |
| 51 | 448 | பெரியாரைத் துணைக்கோடல் | இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பா ரிலானுங் கெடும் | அறிவுரை கூறும் பெரியோரின் துணை இல்லாதவர்கள் , தன்னைக் கெடுக்கும் பகைவர் எவரும் இல்லாவிட்டாலும் தானே கெடுவர். | |
| 52 | 452 | சிற்றினஞ்சேராமை | நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு இனத்தியல்ப தாகும் அறிவு | நீர், சேர்ந்த நிலத்தின் தன்மையால் தன இயல்பை இழந்து, நிலத்தின் இயல்பாகவே மாறி விடும். அதுபோல மனிதனின் அறிவும் அவர் சேர்ந்த இனத்தின் இயல்பாகவே ஆகி விடும் | இனம்: வகை ; குலம் ; சுற்றம் ; சாதி ; கூட்டம். |
| 53 | 467 | தெரிந்துசெயல்வகை | எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு | நன்றாகச் சிந்தித்த பிறகே செயலில் இறங்க வேண்டும்; இறங்கிய பிறகு | துணி: ஒளி; தெளிவு; துண்டம்; உறுதி; ஆடை; தேரில் கட்டிய கொடி . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | சிந்திக்கலாம் என்பது தவறு. | |
| 54 | 471 | வலியறிதல் | வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல் | செயலின் வலிமையும் தன் வலிமையும் பகைவனுடைய வலிமையும், இருவருக்கும் துணையானவரின் வலிமையும் ஆராய்ந்து செயல்பட வேண்டும். | தூக்கு: தொங்கவிடும் பொருள் ; உறி ; ; நிலைகோல்; ; பாட்டு ; கூத்து ; இசை; ஆராய்ச்சி; தூக்கணங்குருவி; .ஆராய்; உயர்த்து ; நிறுத்து |
| 55 | 475 | வலியறிதல் | பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ் சால மிகுத்துப் பெயின் | மயில் இறகாக இருந்தாலும்கூட அதிகமாக ஏற்றப்பட்டால் அதன் தாங்காமல் வண்டியின் அச்சு முறிந்துவிடும். | |
| 56 | 479 | வலியறிதல் | அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும் | தன் செல்வத்தின் அளவை அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை இருப்பது போல் தோன்றி இல்லாமல் ஆகிவிடும். | |
| 57 | 481 | காலமறிதல் | பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்<br>வேந்தர்க்கு வேண்டும் பொழுது | காக்கை தன்னைவிட வலிய கோட்டானைப் பகலில் வென்றுவிடும். அதுபோல, எதிரியை வீழ்த்துவதற்கு ஏற்ற | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | காலத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். | |
| 58 | 504 | தெரிந்துதெளிதல் | குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல் | ஒருவரின் நல்ல குணங்களையும், அவரது குறைகளையும் ஆராய்ந்து பார்த்து அவற்றில் மிகுதியாக இருப்பவை எவை என்பதைத் தெரிந்து அதன் பிறகு அவரைப் பற்றிய ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டும் | மிகை: மிகுதி ; சிறந்த பொருள் ; மேன்மை ; பெருமை ; தேவையற்றது ; செருக்கு ; தீச்செயல் ; தவறு ; தண்டனை ; வருத்தம் ; துன்பம் ; கேடு . |
| 59 | 517 | தெரிந்துவினையாடல் | இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் | ஒரு காரியத்தை ஒருவர் எப்படி செய்து முடிப்பார் என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு அந்தக் காரியத்தை அவரிடம் ஒப்படைக்க வேண்டும் | |
| 60 | 594 | ஊக்கமுடைமை | ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்க முடையா னுழை | தளராத ஊக்கம் உள்ளவனிடம், செல்வம் தானே சென்று சேரும். | ஊக்கம்: உள்ளக் கிளர்ச்சி , மனஎழுச்சி ; உள்ளத்தின் மிகுதி ; முயற்சி ; வலிமை ; உயர்ச்சி ; உண்மை |
| 61 | 595 | ஊக்கமுடைமை | வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு | நீர்ப்பூக்களின் அடிக்காம்பின் நீளம் நீரின் அளவே இருக்கும். அது போல மக்களின் உயர்வும் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அவர்களின் மன ஊக்கத்தின் அளவே இருக்கும். | |
| 62 | 616 | ஆள்வினையுடைமை | முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும் | முயற்சி செல்வத்தைச் சேர்க்கும்; முயலாமல் இருப்பது வறுமைக்குள் சேர்ந்து விடும். | |
| 63 | 664 | வினைத்திட்பம் | சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல் | சொல்லுவது எல்லோருக்கும் எளிது; சொல்லியதை சொல்லியது போல் செய்து முடிப்பதுதான் கடினம். | வண்ணம் : நிறம் ; ; அழகு; ஒப்பனை ; குணம் ; நன்மை ; சிறப்பு ; கனம் ; வடிவு ; சாதி ; இனம்; பண் ; மாலை ; |
| 64 | 706 | குறிப்பறிதல் | அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம் | தன் அருகே இருக்கும் பொருளைக் காட்டும் கண்ணாடி போல் ஒருவனது மனத்தில் உள்ளதை அவன் முகம் காட்டிவிடும். | பளிங்கு: படிகம் ; கண்ணாடி; சுக்கிரன் ; தோணிக்கயிறு ; புட்பராகம் . |
| 65 | 734 | நாடு | உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு | பசியும், நோயும்,, பகையுமற்ற நாடுதான் சிறந்த நாடு எனப் பாராட்டப்படும். | பிணி : நோய் ; கட்டு ; பற்று ; பின்னல் ; அரும்பு ; துன்பம் ; நெசவுத்தறியின் நூற்படை . |
| 66 | 786 | நட்பு | முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகநக நட்பது நட்பு | முகம் மட்டுமே மலரப் பழகுவது நட்பு அல்ல.. அன்பால் மனமும் மலரப் பழகுவதே நட்பு. | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 67 | 788 | நட்பு | உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு | ஆடை நழுவும்போது உடனே சென்று உதவும் கை போல, நண்பனுக்குத் துன்பம் வந்த போது உடனே சென்று உதவுவது நட்பு | கை: கரம் ; யானைத்துதிக்கை ; கதிர் ; சிறகு ; சேனை ; ஒப்பனை ; ஆற்றல் ; கையளவு ; ஆள் ; சிறுமை ; ; குற்றம் |
| 68 | 948 | மருந்து | நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல் | நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும். | |
| 69 | 972 | பெருமை | பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான் | பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும். | |
| 70 | 1033 | உழவு | உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர் | உழவு செய்து வாழ்பவர்களே உரிமையோடு வாழ்பவர்கள். மற்றவர்கள் எல்லோரும் அவர்களைத் சார்ந்து வாழ்பவர்கள். | |

# குறள்கள் – கனிகள் நிலை

| # | குறள் எண் | அதிகாரம் | குறள் | பொருள் | ஒரு சொல் பல பொருள் |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | கடவுள் வாழ்த்து | அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு. | எழுத்துக்கள் எல்லாம் அகரத்தில் தொடங்குகின்றன;(அது போல) உலகம் கடவுளில் தொடங்குகிறது. | ஆதி : தொடக்கம் ; பழைமை ; கடவுள் ; ; சூரியன் ; சுக்கிரன் ; நாரை ; ஆடாதோடை . |
| 2 | 2 | கடவுள் வாழ்த்து | கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின் | தூய அறிவு வடிவானவனின் திருவடிகளை வணங்காதவர், படித்ததனால் பெற்ற பயன்தான் என்ன?. | பயன் : பலன் ; செல்வம் ; பழம் ; அகலம் ; சாறு ; பால் ; அமுதம் ; நீர் . |
| 3 | 6 | கடவுள் வாழ்த்து | பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார் | மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளின் வழிப் பிறக்கும் தீய ஆசைகளை அழித்து, ஒழுக்க வழி வாழ்பவர் நிலை பெற்ற நல்வாழ்க்கை வாழ்வர் | பொறி : வரி , கோடு , புள்ளி ; தழும்பு ; எழுத்து; வண்டு ; விதி ; மெய் , வாய் , கண் , மூக்கு , செவி என்னும் ஐம்பொறி ; ஒளி;கண்மணி. |
| 4 | 11 | வான் சிறப்பு | வான்நின்று உலகம் வழங்கி வருதலால் தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று | உரிய காலத்தில் இடைவிடாது மழை பெய்வதால்தான் உலகம் நிலைபெற்று வருகிறது; | அமிர்தம் : உணவு ; ஆவின்பால்; நெய் ; மோர் ; நீர் ; மழை ; தேவருணவு ; பாதரசம் . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அதனால் மழையே அமிழ்தம் எனலாம் | |
| 5 | 12 | வான் சிறப்பு | துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை | உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவோர்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும் | துப்பாக்கி : துமுக்கி ; சுடுங்கருவி ; கதிர்த்தலையைத் தாக்கும் நெற்பயிர்நோய் . |
| 6 | 13 | வான் சிறப்பு | விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உள்நின்று உடற்றும் பசி | கடல்நீர் சூழ்ந்த உலகமாயினும் மழை பெய்யாது போனால் வாழும் உயிர்களைப் பசி வாட்டி வதைக்கும் | |
| 7 | 14 | வான் சிறப்பு | ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும் வாரி வளங்குன்றிக் கால் | மழை என்னும் வருவாய் தன் வளத்தில் குறைந்தால், உழவர் ஏரால் உழவு செய்யமாட்டா | கால் : நாலில் ஒன்று ; பாதம் ; எழுத்தின் கால் ; நெசவுத்தறியின் மிதி ; கைப்பிடி ; மரக்கால் ; அளவு ; கதிர் ; ; காற்று ; ; காலன் ; கருநிறம். |
| 8 | 15 | வான் சிறப்பு | கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை | பெய்யாமல் மக்களைக் வருந்துவதும், வருந்துவோர்க்கு துணையாய் நின்று, பெய்து காப்பாற்றுவதும் மழையே யாகும் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | 16 | வான் சிறப்பு | விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே பசும்புல் தலைகாண்பு அரிது | வானத்திலிருந்து மழைத்துளி விழாது போனால், பசும்புல்லின் நுனியைக்கூட இங்கே காண முடியாது. | தலை : சிரம் ; முதல் ; சிறந்தது ; வானம் ; இடம் ; உயர்ந்தோன் ; தலைவன் ; உச்சி ; நுனி . |
| 10 | 20 | வான் சிறப்பு | நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும் வான்இன்று அமையாது ஒழுக்கு | எவரும் நீர் இல்லாமல் வாழமுடியாது; அந்த நீரோ மழை இல்லாமல் கிடைக்காது | நீர் :தண்ணீர் ; கடல் ; இரசம் ; பனிநீர் ; உடல் இரத்தம் ; ஈரம் ; மணியின் ஒளி ; குணம் . |
| 11 | 23 | நீத்தார் பெருமை | இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார் பெருமை பிறங்கிற்று உலகு | நன்மை எது, தீமை எது என்பதை ஆய்ந்தறிந்து நன்மைகளை மேற்கொள்பவர்களே உலகில் பெருமைக்குரியவர்களாவார்கள். | அறம் : தருமம் ; புண்ணியம் ; அறச்சாலை; மதம்; ஞானம் ; நோன்பு ; இதம் ; இன்பம் |
| 12 | 26 | நீத்தார் பெருமை | செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலா தார் | செய்ய கடினமான நல்ல செயல்களை செய்பவர்கள் பெரியோர்! அப்படிப்பட்ட செயல்களை செய்யாதோர் சிறியோர்! | |
| 13 | 28 | நீத்தார் பெருமை | நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும் | சான்றோர்களின் அறவழி நூல்களே , அவர்களின் பெருமையை இந்த உலகில் அழியாமல் எடுத்துக் காட்டும் | மொழி : சொல் ; கட்டுரை ; சொற்றொகுதி (சொல்தொகுதி) ; பேச்சுமுறை ; |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | வாக்குமூலம்; பொருள்; மரக்கணு. |
| 14 | 29 | நீத்தார் பெருமை | குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயும் காத்தல் அரிது. | பெரியவர்கள் கோபம் கொண்டால் அந்தக் கோபம் அவர்கள் உள்ளத்தில் ஒரு நொடி கூட நிலைத்து நிற்காது | குணம் : பொருளின் தன்மை ; ஒழுக்கம்; மேன்மை ; புத்தித் தெளிவு ; நிறம் ; வில்லின் நாண்; குடம் ; கயிறு . |
| 15 | 31 | அறன்வலியுறுத்தல் | சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு | சிறப்பையும், செழிப்பையும் தரக்கூடிய அறவழி ஒன்றைத்தவிர நல்ல வழி வேறு எதுவும் இல்லை | சிறப்பு : பெருமை ; திருவிழா ; செல்வம் ; அன்பளிப்பு ; மதிப்பு ; தலைமை ; பகட்டு ; வரிசை ; மிகுதி ; |
| 16 | 32 | அறன்வலியுறுத்தல் | அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை மறத்தலின் ஊங்கில்லை கேடு | அறம் செய்வதை விட நன்மையும் இல்லை. அதைச் செய்ய மறப்பதைவிட தீமையும் இல்லை | கேடு : அழிவு ; இழப்பு ; வறுமை ; தீமை ; கெடுதல் ; வேறுபாடு ; அழகின்மை . |
| 17 | 34 | அறன்வலியுறுத்தல் | மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற | மனம் தூய்மையாக இருப்பதே அறம்; மற்றவை எல்லாம் வெறும் ஆடம்பரமே! | மாசு : அழுக்கு ; குற்றம் ; மறு ; மாறுபாடு ; கருமை ; இருள் ; மேகம் ; பாவம் ; தீமை ; தூளி; பால்வீதிமண்டலம்; கோழை. |
| 18 | 35 | அறன்வலியுறுத்தல் | அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம் | பொறாமை, பேராசை, கோபம், புண்படுத்தும் சொல் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | இந்த நான்கும் இல்லாமல் வாழ்வதே அறமாகும் | |
| 19 | 36 | அறன்வலியுறுத்தல் | அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது பொன்றுங்கால் பொன்றாத் துணை | பிறகு பார்த்துக்கொள்ளலாம் என எண்ணாமல் இப்போதே அறத்தைச் செய்க; அதுவே அழியாத புகழை கொடுக்கும் | துணை : அளவு ; இணை; ஒப்பு ; ஆதரவு , உதவி ; பாதுகாப்பு ; கூட்டு ; இரண்டு; ஆயுதமுனை ; அம்பு. |
| 20 | 39 | அறன்வலியுறுத்தல் | அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம் புறத்த புகழும் இல | அறவழியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அதற்கு மாறான வழியில் வருவது புகழை கொடுக்காது. | புகழ்: துதி ; கீர்த்தி ; அருஞ்செயல் ; அகத்தி ; வாகை; பாராட்டு. |
| 21 | 44 | இல் வாழ்க்கை | பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல் | பொருள் சேர்க்கும் பொது பழிக்கு அஞ்சிச் சேர்த்து, செலவு செய்யும் போது பகுந்து உண்பதை மேற்க்கொண்டால், அவ்வாழ்கையின் ஒழுங்கு எப்போதும் குறைவதில்லை | பழி: குற்றம் ; குறை ; பாவம் ; பொய் ; பகை; ஒன்றுக்கும் உதவாதவன் . |
| 22 | 45 | இல் வாழ்க்கை | அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது | அன்பான உள்ளமும் அதையொட்டிய நல்ல செயல்களும் இருந்தால் இல்வாழ்க்கை பண்பும், பயனும் பயனும் கொண்டு விளங்கும் | பண்பு :வண்ணம் , வடிவு , அளவு , சுவை என்னும் நாற்குணம் ; இயல்பு ; மனத்தன்மை ; நற்குணம் ; விதம்; வகை; முறை; அழகு. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23 | 49 | இல் வாழ்க்கை | அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும் பிறன்பழிப்ப தில்லாயின் நன்று | இல்வாழ்க்கையே சிறந்த அறம் ஆகும். அதுவும் பிறர் பழிக்கு ஆளாகாமல் இருப்பது நல்லது | நன்று : நல்லது ; சிறப்பு ; பெரிது ; அறம் ; இன்பம் ; உதவி ; வாழ்வின் நோக்கம் . |
| 24 | 50 | இல் வாழ்க்கை | வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும் தெய்வத்துள் வைக்கப் படும் | உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன், வானுலகத்தில் உள்ள தெய்வம் போல் மதிக்கப்படுவான் | வையம் : பூமி ; உலகம்; குதிரை இழுக்கும் வண்டி ; தேர் ; ஊர்தி ; கூடாரவண்டி ; எருது ; விளக்கு ; யாழ் . |
| 25 | 60 | வாழ்க்கைத் துணைநலம் | மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன் நன்கலம் நன்மக்கட் பேறு | பண்பாடுதான் இல்வாழ்க்கையின் சிறப்பு; அதற்கு மேலும் சிறப்பு நல்ல பிள்ளைகளைப் பெற்றிருப்பது | மங்கலம் :ஆக்கம் ; பொலிவு ; நற்செயல் ; நன்மை ; தாலி ; தருமம் ; சிறப்பு ; வாழ்த்து; செல்வம். |
| 26 | 64 | மக்கட்பேறு | அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள் சிறுகை அளாவிய கூழ் | தம்முடைய மக்களின் சிறு கைகளால் அளாவப்பெற்ற உணவு, பெற்றோர்க்கு அமிழ்தத்தை விட மிக்க இனிமை உடையதாகும். | |
| 27 | 67 | மக்கட்பேறு | தந்தை மகற்காற்று நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல் | பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு செய்யும் நல்லுதவி, அவர்களை கற்றவர் அவையில் முதன்மை பெற செய்வது. | மகன்: புதல்வன் ; ஆண்பிள்ளை ; குழந்தை ; சிறந்தோன் ; வீரன் ; கணவன் . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 28 | 69 | மக்கட்பேறு | ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய் | நல்ல மகனைப் பெற்றெடுத்தவள் என்று ஊரார் பாராட்டும் பொழுது அவனைப் பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியைவிட அதிக மகிழ்ச்சியை அந்தத் தாய் அடைவாள். | தாய் : அன்னை ; அரசி; குருவின் மனைவி; அண்ணன் மனைவி; மகன்/மகள் கொடுத்தவள் (மாமியார்) . |
| 29 | 70 | மக்கட்பேறு | மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்எனும் சொல் | பிள்ளைகள் தம் பெற்றோர்க்கு செய்யும் கைம்மாறு, இந்த பிள்ளையை பெற இவர்கள் என்ன தவம் செய்தார்களோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும் | |
| 30 | 71 | அன்புடைமை | அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும் | உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாழ்ப்பாள் போட்டு அடைத்து வைக்க முடியாது. அன்புடையவரின் சிறு கண்ணீரே உள்ளே இருக்கும் அன்பைப் பலரும் அறிய வெளிப்படுத்திவிடும் | தாழ் : தாழ்ப்பாள் ; சீப்பு ; தாழக்கோல்; திறவுகோல் ; நீளம் ; வணங்கு; அடிபணிதல். |
| 31 | 72 | அன்புடைமை | அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு | அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே வேண்டும் என்று வாழ்வர். அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய | அன்பு: பற்று ; நேயம் ; அருள் ; பக்தி, பாசம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அனைத்தும் பிறருக்கென வாழ்வர். | |
| 32 | 80 | அன்புடைமை | அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு | அன்பை அடிப்படையாகக் கொண்டதே உயிர் உள்ள உடம்பு. அன்பு இல்லை என்றால் இது வெறும் எலும்பின்மேல் தோலைப் போர்த்தியது போன்றது ஆகும். | |
| 33 | 90 | விருந்தோம்பல் | மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து. | அனிச்சப்பூ முகர்த்தவுடன் வாடி விடும். அதுபோல், முகம் மகிழ்ச்சி இல்லாமல் வரவேற்றால் விருந்தினர் வாடி விடுவார் | முகம் : நுனி ; தொடக்கம் ; வடிவு ; ; தியானம் ; முகத்துதி ; காரணம் ; முதன்மை . |
| 34 | 100 | இனியவைகூறல் | இனிய உளவாக இன்னாத கூறல் கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. | இனிமையான சொற்கள் இருக்கும்போது அவற்றை விட்டு கடுமையாகப் பேசுவது நல்ல பழங்கள் இருக்கும் போது அவற்றை விட்டு காய்களைத் உண்பது போலாகும் | கனி : பழம் ; கனிவு ; சாரம் ; இனிமை ; சுரங்கம் . |
| 35 | 102 | செய்நன்றி அறிதல் | காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது | தேவைப்படும் காலத்தில் செய்த உதவி சிறியதாக இருந்தாலும், அது உலகத்தைவிடப் பெரியதாக மதிக்கப்படும் | காலம் : பொழுது ; சமயம் ; நேரம்; பருவம் ; பருவப் பயிர் ; முக்காலம் ; இசைக்குரிய மூன்று காலம் ; தாளப்பிரமாணம் . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36 | 108 | செய்நன்றி அறிதல் | நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று | ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதல்ல. ஆனால், ஒருவர் தீமை செய்திருந்தால் அதை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது | |
| 37 | 114 | நடுவு நிலைமை | தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்ப படும் | ஒருவர் நேர்மையானவரா அல்லது நேர்மையில்லாதவரா என்பது அவருக்குப் பின் அவரைப்பற்றி சொல்லப்படும் புகழ் சொல்லைக் கொண்டோ அல்லது பழிச் சொல்லைக் கொண்டோதான் அறியப்படும். | எச்சம்: எஞ்சி நிற்பது , மிச்சம் ; எச்சில் ; பறவைக்கழிவு: குறைவு |
| 38 | 121 | அடக்கமுடைமை | அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும் | அடக்கம் அழியாத புகழைக் கொடுக்கும். அடங்காமை ஒருவரின் வாழ்வையே கெடுத்து விடும் | அடக்கம்: கீழ்ப்படிவு ; பணிவு ; அடங்கிய பொருள் ; மறை பொருள் ; கொள்முதல் |
| 39 | 127 | அடக்கமுடைமை | யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு | ஒருவர் எதைக் காத்திட முடியாவிட்டாலும் நாவை அடக்கிக, நற்சொல்லே சொல்ல வேண்டும் . இல்லைஎன்றால் அவர் | நாக்கு: சொல்; தீயின் சுடர்: பூட்டின் தாள்; தானியக்கதிர்: துடுப்பு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | சொன்ன சொல்லே அவர் துன்பத்துக்குக் காரணமாகி விடும் | |
| 40 | 129 | அடக்கமுடைமை | தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு | நெருப்பினால் சுட்ட புண்கூட ஆறி விடும்; ஆனால் வெறுப்புக் கொண்டு சொல்லும் சொற்கள் நீங்காத துன்பம் தரும். | |
| 41 | 131 | ஒழுக்கமுடைமை | ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும் | ஒருவருக்கு ஒழுக்கம் சிறப்பைத் தரும். அதனால் அதை உயிரைக் காட்டிலும் மேலானதாக காக்க வேண்டும். | உயிர் : காற்று ; மூச்சு; ஆன்மா; ஓரறிவுயிர் முதலிய உயிரினம் ; உயிரெழுத்து ; ஓசை. |
| 42 | 151 | பொறையுடைமை | அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை | தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம் போல், தம்மை இகழ்வாரையும் பொறுப்பதே நல்ல பண்பாகும் | நிலம் : தரை ; மண் ; பூமி ; இடம் ; வயல் ; பதவி ; தானம் ; விடயம்; கள்ளிவகை . |
| 43 | 161 | அழுக்காறாமை | ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு | மனதில் பொறாமை இல்லாமல் வாழும் குணத்தை, ஒருவன் தனக்கு உரிய ஒழுக்கமாகக் கொண்டு வாழ வேண்டும் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 44 | 184 | புறங்கூறாமை | கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க<br>முன்னின்று பின்நோக்காச் சொல் | ஒருவர் முகத்திற்கு நேராக அவரது குறைகளைப் பற்றிக் கடுமையாகப் பேசினாலும், அவர் இல்லாத போது அவரைப் பற்றிக் குறை கூறுவது தவறு | கண்: விழி ; கண்ணோட்டம்; மரக்கணு ; தொளை ; மூங்கில் முரசடிக்குமிடம் ; மூட்டுவாய் ; பெருமை ; இடம் ; அறிவு |
| 45 | 190 | புறங்கூறாமை | ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்<br>தீதுண்டோ மன்னும் உயிர்க்கு | பிறர் குற்றத்தைக் காண்பவர்கள் தமது குற்றத்தையும் எண்ணிப் பார்த்தல்,புறங்கூறும் பழக்கமும் போகும்; வாழ்க்கையும் நிம்மதியாக அமையும். | குற்றம்: பிழை ; பழி ; தவறு ; தப்பு; துன்பம் ; உடற்குறை ; தீங்கு ; அபராதம். |
| 46 | 200 | பயனில சொல்லாமை | சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க<br>சொல்லிற் பயனிலாச் சொல் | சொற்களில் பயன் உடைய சொற்களை மட்டுமே சொல்லவேண்டும், பயன் இல்லாத சொற்களைச் சொல்லவே கூடாது | சொல் : மொழி ; பேச்சு ; பழமொழி ; உறுதிமொழி ; புகழ் ; மந்திரம் ; ; கட்டளை ; புத்திமதி ; சத்தம் ; நாமகள் ; ; நெல்; வார்த்தை. |
| 47 | 202 | தீவினையச்சம் | தீயவை தீய பயத்தலால் தீயவை<br>தீயினும் அஞ்சப் படும் | தீய செயல்களால் தீமையே விளையும் என்பதால் அச்செயல்களைத் தீயை விடக் கொடுமையானதாகக் கருதி அவற்றைச் செய்யக்கூடாது | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 48 | 212 | ஒப்புரவறிதல் | தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு | ஒருவன் முயன்று சம்பாதித்த பொருள் தகுதியுடையவருக்கு உதவி செய்யவே பயன் பட வேண்டும் | தக்கார்: தகுதியுடையோர் ;மேன்மக்கள் ; நடுவுநிலைமையுடையோர் ; பெருமையிற் சிறந்தோர் ; உறவினர் . |
| 49 | 221 | ஈகை | வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம் குறியெதிர்ப்பை நீர துடைத்து | பலனை எதிர்பார்க்காமல், ஏதும் இல்லாதவர்களுக்குக் கொடுப்பதே ஈகை | ஈகை : கொடை ; பொன் ; காடை ; காற்று ; மேகம் ; கற்பகமரம் ; கொடுத்தல். |
| 50 | 226 | ஈகை | அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி | ஏதும் இல்லாதவரின் கடும்பசியைத் தீர்த்து வைப்பதே பொருளைப் பெற்றவர் சேமித்து வைக்கும் இடமாகும். | பொருள்: செல்வம்; செய்தி ; உண்மைக்கருத்து ; தத்துவம் ; அறிவு ; கொள்கை ; அறம் ; பயன்; கடவுள் ; பலபண்டம் ; பொன் ; மகன் ; தந்திரம் . |
| 51 | 231 | புகழ் | ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு | ஏழைகளுக்கு கொடுப்பது, அதனால் புகழ் பெற்று வாழ்வது இதுவே ஒருவருக்கு பயன் தரக்கூடியது. | ஊதியம் : சம்பளம்; கல்வி ; பயன்; வெகுமதி; வெகுமானம்; சன்மானம் |
| 52 | 236 | புகழ் | தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று. | எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதில் புகழுடன் விளங்கவேண்டும்; இல்லையேல் அந்தத் | புகழ்: துதி ; கீர்த்தி ; பெருமை; அருஞ்செயல் ; அகத்தி ; வாகை . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | துறையில் ஈடுபடாமல் இருப்பதே நல்லது | |
| 53 | 280 | கூடாவொழுக்கம் | மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்து விடின் | உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டு விட்டால் மொட்டை அடித்தல், சடை வளர்த்தல் போன்ற புற வேடங்கள் தேவையில்லை | |
| 54 | 281 | கள்ளாமை | உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல் | அடுத்தவர் பொருளை அவருக்குத் தெரியாமல் திருடுவோம் என்று மனத்தால் நினைப்பதுகூட தீமையானது. | |
| 55 | 292 | வாய்மை | பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின் | குற்றம் அற்ற நன்மையைத் தரும் என்றால் சில நேரங்களில் பொய் சொல்வதில் தவறில்லை | புரை: குற்றம் ; குரல்வளை ; விளக்குமாடம் ; உள்ளோடும் புண் ; கண்ணோய்வகை ; பொய் ; களவு ; மடிப்பு ; வீடு ; ஆசிரமம். |
| 56 | 294 | வாய்மை | உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்து ளெல்லாம் உளன் | மனத்தால்கூடப் பொய்யை நினைக்காமல் வாழ்பவர்கள், மக்கள் மனத்தில் நிலையான இடத்தைப் பெறுவார்கள் | உள்ளம் : மனம் ; உள்ளக்கருத்து; எண்ணம் ; ஞானம் ; ஊக்கம் ; முயற்சி. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 57 | 298 | வாய்மை | புறள்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையால் காணப் படும் | உடம்பு தண்ணீரால் சுத்தமாகும்; உள்ளம் உண்மையால் சுத்தமாகும். | அகம் : இருப்பிடம் ; பூமி ; வீடு ; உள் ; மனம் ; அகப்பொருள் ; ' ; பாவம் ; அகம்பாவம் ; மார்பு . |
| 58 | 301 | வெகுளாமை | செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்<br>காக்கின்என் காவாக்கால் என் | எங்கே தன் கோபம் பலிக்குமோ அங்கே கோபம் கொள்ளாதவனே உண்மையாகவே கோபம் கொள்ளாதவன்; பலிக்காத இடத்தில் கோபத்தைத் தடுத்து என்ன? தடுக்காமல் விட்டுத்தான் என்ன?. | |
| 59 | 305 | வெகுளாமை | தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்<br>தன்னையே கொல்லுஞ் சினம் | ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ள கோபம் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும், இல்லா விட்டால் அந்தக் கோபம் அவனையே அழித்து விடும் | |
| 60 | 314 | இன்னாசெய்யாமை | இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயஞ் செய்து விடல் | நமக்குத் தீமை செய்தவருக்கு கொடுக்கும் தண்டனை , அவர் வெட்கித் தலைகுனியும்படியாக அவருக்கு நன்மை செய்வதுதான். | நாணம்: வெட்கம்; அறிவு; பயபக்தி; மானம்; தணிகை; கூச்சம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 61 | 319 | இன்னாசெய்யாமை | பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா பிற்பகல் தாமே வரும் | அடுத்தவர்க்குத் தீமை செய்தால், நமக்குத் தீமை நம்மைத் தேடி தானாக வரும். | |
| 62 | 391 | கல்வி | கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக | கற்கும் போது தவறில்லாமல் கற்றுக்கொள்ள வேண்டும். பிறகு, அதை பின் பற்றி நடக்கவேண்டும் | கசடு: குற்றம்; அழுக்கு; மாசு ; தழும்பு ; வடு; குறைவு. |
| 63 | 396 | கல்வி | தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு | தோண்டத் தோண்ட ஊற்று நீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும். | |
| 64 | 400 | கல்வி | கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றை யவை | கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கிணையான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை. | செல்வம்: கல்வி; அழகு; செழிப்பு; பொருள்; பணம்; மகளிரின் கொஞ்சற்பேச்சு . |
| 65 | 416 | கேள்வி | எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் | நல்லவற்றை எந்த அளவுக்கு கேட்டு அறிகிறோமோ , அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும். | பெருமை: மாட்சிமை ; மிகுதி ; பருமை ; புகழ் ; வல்லமை ; அகந்தை ; அருமை . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 66 | 423 | அறிவுடைமை | எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்<br>மெய்ப்பொருள் காண்ப தறிவு | எந்தக் கருத்தை யார் சொல்லக் கேட்டாலும் , அதனை ஆராய்ந்து, உண்மையை அறிந்து செயல்பட வேண்டும் | மெய்: உண்மை ; உடல் ; உயிர் ; உணர்ச்சி ; மார்பு ; ஒற்றெழுத்து . |
| 67 | 435 | குற்றங்கடிதல் | வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்<br>வைத்தூறு போலக் கெடும் | தமக்கு ஒரு தீமை வருவதற்கு முன்பே காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை, நெருப்பின் முன் வைத்த வைக்கோல் போல் அழிந்துவிடும். | |
| 68 | 448 | பெரியாரைத் துணைக்கோடல் | இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்<br>கெடுப்பா ரிலானுங் கெடும் | அறிவுரை கூறும் பெரியோரின் துணை இல்லாதவர்கள் , தன்னைக் கெடுக்கும் பகைவர் எவரும் இல்லாவிட்டாலும் தானே கெடுவர். | |
| 69 | 452 | சிற்றினஞ்சேராமை | நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு<br>இனத்தியல்ப தாகும் அறிவு | நீர், சேர்ந்த நிலத்தின் தன்மையால் தன இயல்பை இழந்து, நிலத்தின் இயல்பாகவே மாறி விடும். அதுபோல மனிதனின் அறிவும் அவர் சேர்ந்த இனத்தின் இயல்பாகவே ஆகி விடும் | இனம்: வகை ; குலம் ; சுற்றம் ; சாதி ; கூட்டம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 70 | 466 | தெரிந்துசெயல்வகை | செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க செய்யாமை யானுங் கெடும் | செய்யக் கூடாததைச் செய்வதால் கேடு ஏற்படும்; செய்ய வேண்டியதைச் செய்யாமல் விட்டாலும் கேடு ஏற்படும். | |
| 71 | 467 | தெரிந்துசெயல்வகை | எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு | நன்றாகச் சிந்தித்த பிறகே செயலில் இறங்க வேண்டும்; இறங்கிய பிறகு சிந்திக்கலாம் என்பது தவறு. | துணி: ஒளி; தெளிவு; துண்டம்; உறுதி; ஆடை; தேரில் கட்டிய கொடி . |
| 72 | 471 | வலியறிதல் | வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல் | செயலின் வலிமையும் தன் வலிமையும் பகைவனுடைய வலிமையும், இருவருக்கும் துணையானவரின் வலிமையும் ஆராய்ந்து செயல்பட வேண்டும். | தூக்கு: தொங்கவிடும் பொருள் ; உறி ; ; நிலைகோல்; ; பாட்டு ; கூத்து ; இசை; ஆராய்ச்சி; தூக்கணங்குருவி; .ஆராய்; உயர்த்து ; நிறுத்து |
| 73 | 475 | வலியறிதல் | பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ் சால மிகுத்துப் பெயின் | மயில் இறகாக இருந்தாலும்கூட அதிகமாக ஏற்றப்பட்டால் அதன் தாங்காமல் வண்டியின் அச்சு முறிந்துவிடும். | |
| 74 | 476 | வலியறிதல் | நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின் உயிர்க்கிறுதி ஆகி விடும் | நுனிக்கிளைக்கு மேலே ஏறுபவர்களின் நிலைதான், தன்னைப் பற்றி அதிகமாக நினைத்துக் கொண்டு எல்லை மீறிப் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | போகிறவர்களுக்கு ஏற்படும். | |
| 75 | 477 | வலியறிதல் | ஆற்றின் அறவறிந்து ஈக அதுபொருள்<br>போற்றி வழங்கு நெறி | வருவாய் அளவை அறிந்து, அதற்கு ஏற்ப பிறருக்குக் கொடுப்பதே பொருளைச் காத்து வாழும் வழியாகும். | |
| 76 | 479 | வலியறிதல் | அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல<br>இல்லாகித் தோன்றாக் கெடும் | தன் செல்வத்தின் அளவை அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை இருப்பது போல் தோன்றி இல்லாமல் ஆகிவிடும். | |
| 77 | 481 | காலமறிதல் | பகல்வெல்லும் கூகையைக் காக்கை<br>இகல்வெல்லும்<br>வேந்தர்க்கு வேண்டும் பொழுது | காக்கை தன்னைவிட வலிய கோட்டானைப் பகலில் வென்றுவிடும். அதுபோல, எதிரியை வீழ்த்துவதற்கு ஏற்ற காலத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். | |
| 78 | 491 | இடனறிதல் | தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்<br>இடங்கண்ட பின்அல் லது | ஈடுபடும் செயல் ஒன்றும் பெரிதல்ல என இகழ்ச்சியாகக் கருதாமல், முற்றிலும் சரியான இடத்தைத் தேர்ந்தெடுத்து அச்செயலில் இறங்க வேண்டும். | வினை: தொழில்; செய்தற்குரியது; செயல்; முயற்சி ; போர் ; வஞ்சகம் ; தந்திரம் ; கருத்து ; தொந்தரவு. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 79 | 504 | தெரிந்துதெளிதல் | குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல் | ஒருவரின் நல்ல குணங்களையும், அவரது குறைகளையும் ஆராய்ந்து பார்த்து அவற்றில் மிகுதியாக இருப்பவை எவை என்பதைத் தெரிந்து அதன் பிறகு அவரைப் பற்றிய ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டும் | மிகை: மிகுதி ; சிறந்த பொருள் ; மேன்மை ; பெருமை ; தேவையற்றது ; செருக்கு ; தீச்செயல் ; தவறு ; தண்டனை ; வருத்தம் ; துன்பம் ; கேடு . |
| 80 | 517 | தெரிந்துவினையாடல் | இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் | ஒரு காரியத்தை ஒருவர் எப்படி செய்து முடிப்பார் என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு அந்தக் காரியத்தை அவரிடம் ஒப்படைக்க வேண்டும் | |
| 81 | 527 | சுற்றந்தழால் | காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும் அன்னநீ ரார்க்கே உள | காக்கை தன் உணவை மறைக்காமல், தன் இனத்தைச் சத்தமிட்டு அழைத்து உண்ணும்; அந்த குணம் உடையவருக்கு மட்டுமே உலகில் உயர்வு உண்டு | ஆக்கம்: படைப்பு ; செல்வம் ; பொன் ; பெருக்கம்; ஈட்டம்; திருமகள்; மங்களகரம்; வாழ்த்து . |
| 82 | 549 | செங்கோன்மை | குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல் வடுவன்று வேந்தன் தொழில் | குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் | கடி: காவல் ; விரைவு ; கூர்மை ; அச்சம் ; வியப்பு ; கடுமை; நீக்கம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தண்டிப்பது அரசின் கடமையாகும். | |
| 83 | 553 | கொடுங்கோன்மை | நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன் நாடொறும் நாடு கெடும் | நாள் தோறும் தன் ஆட்சியில் நன்மை தீமைகளை ஆராய்ந்து ஏற்ற நீதியை வழங்காத அரசன், மெல்ல மெல்லத் தன் நாட்டை இழந்து விடுவான் | நாடி: ஆராய்தல்; நாட்டிலுள்ளவள் ; இரத்தக்குழாய் முதலியன ; மூச்சுக்குழாய் யாழின் நரம்பு ; பூவின் தாள் ; நாழிகை ; மூக்கு ; மோவாய்: ; இலைநரம்பு . |
| 84 | 594 | ஊக்கமுடைமை | ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்க முடையா னுழை | தளராத ஊக்கம் உள்ளவனிடம், செல்வம் தானே சென்று சேரும். | ஊக்கம்: உள்ளக் கிளர்ச்சி , மனஎழுச்சி ; உள்ளத்தின் மிகுதி ; முயற்சி ; வலிமை ; உயர்ச்சி ; உண்மை |
| 85 | 595 | ஊக்கமுடைமை | வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு | நீர்ப்பூக்களின் அடிக்காம்பின் நீளம் நீரின் அளவே இருக்கும். அது போல மக்களின் உயர்வும் அவர்களின் மன ஊக்கத்தின் அளவே இருக்கும். | |
| 86 | 601 | மடியின்மை | குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும் மாசூர மாய்ந்து கெடும் | பிறந்த குடிப் பெருமை என்னதான் ஒளிமயமாக இருந்தாலும், சோம்பல் குடிகொண்டால் | மடி: வயிறு ; அரை ; தாள் ; அடக்கம் ; தனிமை ; சோம்பல் ; நோய் கேடு; பகை ; பொய் ; தீநாற்றம் ; |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அது மங்கிப் போய் இருண்டு விடும் | ஆடைவகை ; சோறு ; தாழை ; தாழைவிழுது ; மடங்கு . |
| 87 | 616 | ஆள்வினையுடைமை | முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும் | முயற்சி செல்வத்தைச் சேர்க்கும்; முயலாமல் இருப்பது வறுமைக்குள் சேர்ந்து விடும். | |
| 88 | 654 | வினைத்தூய்மை | இடுக்கண் படினும் இளிவந்த செய்யார் நடுக்கற்ற காட்சி யவர் | தெளிந்த அறிவினை உடையவர் தாம் துன்பப்பட நேர்ந்தாலும் இழிவான செயல்களைச் செய்யமாட்டார் | இடுக்கண்: இரக்கம்; துன்பம்; வறுமை; வருத்தம்; கடுமை. |
| 89 | 664 | வினைத்திட்பம் | சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல் | சொல்லுவது எல்லோருக்கும் எளிது; சொல்லியதை சொல்லியது போல் செய்து முடிப்பதுதான் கடினம். | வண்ணம் : நிறம் ; ; அழகு; ஒப்பனை ; குணம் ; நன்மை ; சிறப்பு ; கனம் ; வடிவு ; சாதி ; இனம்; பண் ; மாலை ; |
| 90 | 667 | வினைத்திட்பம் | உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து. | உருவத்தால் சிறியவர்கள் என்பதற்காக யாரையும் கேலி செய்து அலட்சியப்படுத்தக் கூடாது. பெரிய தேர் ஓடுவதற்குக் காரணமான அச்சாணி கூட உருவத்தால் சிறியதுதான் என்பதை உணர வேண்டும். | உருள்: தேருருளை ; வண்டி; வட்டம்; உருட்டு; புரள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 91 | 706 | குறிப்பறிதல் | அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம் | தன் அருகே இருக்கும் பொருளைக் காட்டும் கண்ணாடி போல் ஒருவனது மனத்தில் உள்ளதை அவன் முகம் காட்டிவிடும். | பளிங்கு: படிகம் ; கண்ணாடி; சுக்கிரன் ; தோணிக்கயிறு ; புட்பராகம் . |
| 92 | 734 | நாடு | உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு | பசியும், நோயும்,, பகையுமற்ற நாடுதான் சிறந்த நாடு எனப் பாராட்டப்படும். | பிணி : நோய் ; கட்டு ; பற்று ; பின்னல் ; அரும்பு ; துன்பம் ; நெசவுத்தறியின் நூற்படை . |
| 93 | 752 | பொருள்செயல்வகை | இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு | செல்வம் உள்ளவர்களைப் புகழ்ந்து போற்றுவதும் இல்லாதவர்களை இகழ்ந்து தூற்றுவதும்தான் உலக நடப்பு.. | |
| 94 | 786 | நட்பு | முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகநக நட்பது நட்பு | முகம் மட்டுமே மலரப் பழகுவது நட்பு அல்ல.. அன்பால் மனமும் மலரப் பழகுவதே நட்பு. | |
| 95 | 788 | நட்பு | உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு | ஆடை நழுவும்போது உடனே சென்று உதவும் கை போல, நண்பனுக்குத் துன்பம் வந்த போது உடனே சென்று உதவுவது நட்பு | கை: கரம் ; யானைத்துதிக்கை ; கதிர் ; சிறகு ; சேனை ; ஒப்பனை ; ஆற்றல் ; கையளவு ; ஆள் ; சிறுமை ; ; குற்றம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 96 | 948 | மருந்து | நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல் | நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும். | |
| 97 | 952 | குடிமை | ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும் இழுக்கார் குடிப்பிறந் தார் | ஒழுக்கம், வாய்மை, மானம் ஆகிய இந்த மூன்றிலும் நிலைதவறி நடக்காதவர்களே உயர்ந்தவர்களாகக் கருதப்படுவார்கள். | குடி: பருகு; அருந்து; மதுபானம்; புருவம்; குடியானவன்; குடியிருப்போன்; ஆட்சிக்குட்பட்ட குடிகள் ; குடும்பம் ; குலம் ; வீடு ; ஊர் ; வாழிடம். |
| 98 | 972 | பெருமை | பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான் | பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும். | |
| 99 | 1033 | உழவு | உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர் | உழவு செய்து வாழ்பவர்களே உரிமையோடு வாழ்பவர்கள். மற்றவர்கள் எல்லோரும் அவர்களைத் சார்ந்து வாழ்பவர்கள். | |
| 100 | 1038 | உழவு | ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின் நீரினும் நன்றதன் காப்பு | உழுவதைக் காட்டிலும் உரம் இடுதல் நல்லது; களை எடுப்பதும், நீர் பாய்ச்சுவதும் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மிகவும் நல்லது; அதைவிட நல்லது அந்தப் பயிரைப் பாதுகாப்பது. | |

# தொடர்பு

kuraltheni2019@fetna.org